அனைத்தும் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ணத்தின் அடிப்படையில் திட்டமிட்டு நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றோம்.

அதிகமான கட்டண வசூல் இருக்கிறது என்று ஒன்றிரண்டு குற்றச்சாட்டுகள் தொடக்கத்தில் இருந்தன. இப்போது அவற்றைச் சீர்படுத்தும் விதமாக, online–ல் payment செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்களும் அதை வலியுறுத்தலாம். அதேபோன்று, அதிக கட்டண வசூல் குறித்த குற்றச்சாட்டு இருப்பின், நாங்கள் மீண்டும் அதைக் கண்காணித்து, அனைத்துக் கட்டணங்களையும் online–லேயே payment செய்வதற்குண்டான வசதிகளைச் செய்து தரும் முயற்சியில் ஈடுபடுவோம்.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்பதில்லை; எந்தெந்தப் பகுதிகளில் தேவை இருக்கிறதோ, அதற்கு வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம். அவற்றைப் பரிசீலித்து, நிச்சயமாக அதை வழங்குவதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

210—

சமுதாயக் கூடம்

***1716—திரு. V.P. கந்தசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சூலூர் ஊராட்சி ஒன்றியம், கனியூர் ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சூலூர் ஊராட்சி ஒன்றியம், கனியூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு சமுதாய நலக் கூடம் கட்டப்பட்டு, பயன்பாட்டில் இருக்கிறது. மற்றுமொரு சமுதாயக் கூடம் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட ஊராட்சியில் புதிய சமுதாயக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் காலை வணக்கத்தை இந்த நேரத்தில் உரித்தாக்கிக்கொள்கிறேன். கனியூர் ஊராட்சியில் 14 குக்கிராமங்கள் உள்ளன. உழைக்கின்ற அருந்ததியின மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். சேடபாளையத்தில் மட்டும் சுமார் 200–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். வீடுகளில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், இவர்களுக்கு குடும்ப நிகழ்ச்சிகளை நடத்த சமுதாயக் கூடம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே, அதன் அவசியம் கருதி என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.40 இலட்சம் ஒதுக்கியிருக்கின்றேன். இருந்தாலும்கூட, அந்தத் தொகை போதாது. அங்கிருக்கும் மக்களுக்கு சமையல் கூடமும் தேவைப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிதியோடு சமையல் கூடமும் சேர்த்து கட்டிக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, கிடைக்கும் இடம், தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் சமுதாயக் கூடங்கள் படிப்படியாகக் கட்டப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஒரு*

சமுதாயக் கூடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது. சீபா நகர், சங்கோதிபாளையம் என்கிற இடத்தில் புதிதாக ஒரு சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. மேற்கூரை வரை அந்தப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன. இருப்பினும், உறுப்பினர் அவர்களின் கருத்தினை ஏற்றுக்கொண்டு, அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட சாமளாபுரம் பேரூராட்சியில், சாமளாபுரம் என்கிற ஊரில் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கும் மேலாக 135 அருந்ததியின குடும்பங்கள் வசித்து வந்தார்கள். கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்னால் அது நீர் வழிப் பகுதி என்ற அரசின் உத்தரவின்படி, அந்த 135 வீடுகளும் இடிக்கப்பட்டு, அவர்களெல்லாம் இன்றைக்கு வீதியில் நிற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்பொழுது, அரசின் முயற்சியின் காரணமாக அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்க ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது. உரியவர்களுக்குப் பட்டா வழங்கி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சமுதாயக் கூடம் வேண்டுமா? பட்டா வேண்டுமா? பட்டா வேண்டுமென்றால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரைக் கேட்க வேண்டும். சமுதாய நலக் கூடத்திற்கு என்றால் கேளுங்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *ஆதி திராவிட மக்கள் சார்பாகத்தான் கேட்கிறேன். கிட்டத்தட்ட 135 ஆதி திராவிட மக்களுடைய வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன. திருப்பூர் மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களிடம் கோரிக்கை வைத்தவுடன், 135 பேருக்கும் பட்டா கொடுப்பதற்கு அரசின் சார்பாக ஏற்பாடு செய்தார்கள். இன்னும் கிட்டத்தட்ட 20 பேருக்குப் பட்டா கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கும் பட்டா வழங்கி, இதுவரை இடிக்கப்பட்ட வீடுகளில் வசித்து வந்த அந்த மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்குமாறு தங்களை இந்த நேரத்தில் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, கண்டிப்பாக துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

முற்பகல் 11–10

2. தகவல் கோரல்

(அ) திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, தட்டரணை கிராமம், விசாரணைக் கைதி இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த, (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், விசாரணைக் கைதி மர்மமான முறையில் இறந்தது குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டை அடுத்துள்ள தட்டரணை கிராமத்தில் வாழும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்த தங்கமணி என்பவர் சாராய விற்பனை வழக்கில் 26–4–2022 அன்று விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, பின் மாவட்ட நீதிமன்ற உத்தரவின்படி திருவண்ணாமலை கிளைச் சிறையில் அடைக்கப்பட்டார். 27–4–2022 அன்று காலை வலிப்பு நோய் வந்ததாகவும், மாலை இறந்து விட்டதாகவும் அவருடைய குடும்பத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவல் அறிந்தவுடன் அவரது மகன் தினகரன் தனது தந்தையின் இரு சக்கர வாகனத்தைக் காவல் துறையினர் எடுத்துச் சென்றுவிட்டதாகவும், மேலும், கலால் துறை காவலர்கள் பணம் கேட்டு மிரட்டியதாகவும் தெரிவித்துள்ளார். பிறகு பணம் தர முடியவில்லையென்று கூறியவுடன் சாராய விற்பனை வழக்கில் விசாரிக்க திருவண்ணாமலை கலால் காவல்*